சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

OS No.39/2021 மற்றும் OS No.27/2019

2025ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 06-ம் நாள் வாதி சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண்.44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.P.பொன்னுத்தாய் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் – தனலட்சுமி (Dw1) | தொழில் |
| த/பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

<u>**முதல் விசாரணை**</u>

நான் இந்த வழக்கின் பிரதிவாதி ஆவேன். பிரதிவாதிகள் தரப்பு 1 வது சாட்சி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இதைப்படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளவாறு 05.02.2009 ம் தேதியிட்ட எல்லம்மாள் எனக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவண எண்.542/2009 சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 14.03.2012 ம் தேதியிட்ட என்னுடைய அப்பா ராமசாமி எனக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவண எண்.1907/2012 ன் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 02.06.2017 ம் தேதியிட்ட பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு **பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 02.06.2017 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு பதில் தபால் ரசீது **பி.வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 03.06.2017 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு பதில் தபால் ஒப்புதல் அட்டை **பி.வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

03.02.2009 ம் தேதியிட்ட வாதியின் தாத்தா அழகர்சாமி நாயுடு பெயரில் உள்ள பட்டா எண்.17 **பி.வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 11.12.2018 ம் தேதியிட்ட அருப்புக்கோட்டை துணை தாசில்தார் அவர்களால் வழங்கப்பட்ட பட்டா பெயர் மாற்ற உத்தரவு பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் **பி.வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 03.02.2009 மற்றும் 28.03.2012 ம் தேதியிட்ட வீட்டு வரி ரசீதுகள் அசல் 2 எண்ணம் **பி.வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

(வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.